**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்.**



# 27 இடம் பொருள் கலைஞர்




# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

## விரிவாக்கப் பணிகள் மூலம் வளர்ச்சி

*1989-ஆம் ஆண்டு ஜூன் 20-ஆம் தேதி சென்னையில், **கால்நடை மருத்துவர் சங்கம்** நடத்திய நிகழ்ச்சி ஒன்றில், அன்றைய முதலமைச்சர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஒரு முக்கியமான அறிவிப்பைச் செய்தார். இந்தியாவிலே வேறு எந்த மாநில முதலமைச்சரும் முனைப்பு காட்டியிராத புதிய முன்னெடுப்பு அது. அந்த அறிவிப்பு, அவரது சொற்களிலே...*

*“மிக முக்கியமான கோரிக்கையாக ஆந்திர மாநில வேளாண்மைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் கிருஷ்ண ராவ் அவர்கள், கால்நடைகளுக்கென்று ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது கால்நடைகளுக்கென்று தமிழ்நாட்டில் கல்லூரிகள் சென்னையிலும், நாமக்கல்லிலும் இருக்கின்றன. மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கால்நடை ‘ரிசர்ச் சென்டர்கள்’ இருக்கின்றன.*

*கால்நடைகளுக்கென்று பல்கலைக்கழகங்கள், உலகத்திலே ஆஸ்திரியா, அங்கேரி, புருனைல், பர்மா, ஃபிரான்ஸ், நார்வே, சோவியத் போன்ற நாடுகளில் இருக்கின்றன. ஆனால், இந்தியாவிலே அப்படிப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் இல்லை என்பதைத் தெரிந்து கொள்கிறேன்.*

*சென்னையிலே உள்ள கல்லூரியில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு போன்றவைகளுக்கான வசதிகளும், அதைத் தவிர ஆராய்ச்சிக்கான பி.எச்.டி. போன்ற பட்டங்கள் பெறுவதற்கான வாய்ப்பு வசதிகளும் கூட இருக்கின்றன. எனவே, அதனைப் பயன்படுத்திக் கொண்டும், நாமக்கல்லிலே இருக்கின்ற கல்லூரியை இணைத்துக் கொண்டும், பல்வேறு ரிசர்ச் சென்டர்களை இணைக்கின்ற வகையிலும், புதிதாகத் தொடங்கவிருக்கின்ற உழவர் பயிற்சி நிலையங்களை இணைக்கின்ற வகையிலும், சென்னையிலே கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்".*



*அவரது அறிவிப்பின்படியே, 1989-செப்டம்பர் 20-ஆம் தேதி, பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் கொண்டாட்டங்களை யொட்டி, ‘தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக’ தொடக்க விழா, சென்னை வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.*

### இந்தியாவிலேயே முதல் கல்லூரி!

*19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், வங்கத்தில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தைத் தொடர்ந்து சென்னை சைதாப்பேட்டையில், லண்டன் கால்நடை மருத்துவக் கல்லூரியின் தகுதிகளை யொத்த, கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று, 1903-ஆம் ஆண்டு, இந்தியாவிலேயே முதலாவதாக சென்னையில் தொடங்கப்பட்டது. தென் மண்டலத்திலேயே அது சிறந்த கால்நடை ஆராய்ச்சி மையமாகவும் அமைந்தது.*

*உலகிலேயே கால்நடை மருத்துவர்கள் அன்றைய ஒருங்கிணைந்த சோவியத் நாட்டில்தான் அதிக அளவில் இருந்தனர். அதற்கு அடுத்த இடத்தில் இந்தியர்கள் இருந்தனர்.*

*முதல் கால்நடைக் கல்லூரி என்ற பெருமையோடு, முதல் கால்நடைப் பல்கலைக்கழகம் அமைந்த மாநிலம் என்ற புகழை கழகத்தின் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு பெற்றது. அந்தப் பல்கலைக்கழகம், மாநிலத்தில் 12-வது பல்கலைக்கழகமாகவும் அமைந்தது. சென்னை மாதவரத்தில் அதை கொண்டுவந்தார் கலைஞர்.*

*வெறுமனே பி.எச்.டி. பட்டம் பெறுபவர்களை மட்டும் உருவாக்காமல், மாநிலத்தில் உள்ள விவசாயிகளின் மேம்பாட்டுக்கான விரிவாக்கப் பணிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துச் செயலாற்ற வேண்டும், என்பது இந்தப் பல்கலைக்கழகத்தின் நோக்கமாக இருந்து வருகிறது.*

*‘கால்நடை மருத்துவம் படிக்கிறேன்’ என்று சொன்னால், ‘ஓ... மாட்டு டாக்டரா..?’ என்று மக்கள் கேட்கிற நிலையை மாற்றி, கால்நடை வளர்ப்பு, மீன் வளம், கோழி வளர்ப்பு, பன்றி, முயல் வளர்ப்பு போன்றவற்றை ஒருங்கிணைத்து வேளாண்மைக்கும் கால்நடை மேம்பாட்டுக்கும் என இரண்டு துறைகளிலும் நிபுணத்துவம் கொண்ட அறிஞர்களை உருவாக்கியதில், இந்தப் பல்கலைக்கழகத்துக்குப் பெரும் பங்கு உண்டு.*

### கால்நடை வளர்ச்சிக்குப் புதிய ஊக்கம்

*இந்தப் பல்கலைக்கழகத்தின் தொடக்க விழாவில் தலைவர் கலைஞர் ஆற்றிய உரையில், “இப்பொழுது தொடங்கப்படும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கல்வி கற்பிப்பது, குறித்த கால அளவில் மக்களுக்குத் தேவையான ஆராய்ச்சியில் ஈடுபடுவது மற்றும் விரிவாக்கப் பணிபுரிவது ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபடும்.*

*குறிப்பாகக் கால்நடை வளர்ச்சிக்குப் புதிய ஊக்கத்தை அளிக்கும் வகையில் பயிற்சி தரும். பட்டம் பெறாத கிராமப்புற இளைஞர்கள், பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தியவர்கள், வேலையற்ற பட்டதாரிகள் ஆகியவர்களுக்கு அவர்கள் கைத்தொழில் செய்து கற்கும் வண்ணம் பயிற்சி தரும்போது, அவர்கள் தன்னம்பிக்கையோடு சுயவேலை வாய்ப்புகளைப் பெறவும் முடியும். இதனால் அவர்கள் தமது வருவாயைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்ளுவதோடு, கிராமப்புற வேலையின்மையைக் குறைக்கவும் இது உதவுகிறது" என்றார்.*

*இன்று இந்தப் பல்கலைக்கழகத்தின் மூலம் 2022- ஆண்டில் மட்டும் கால்நடைப் பராமரிப்பு தொடர்பாக 20க்கும் மேற்பட்ட ‘ஸ்டார்ட் அப்’ நிறுவனங்கள் தோன்றியுள்ளன. கலைஞர் கண்ட கனவு நனவாகி வருகிறது!*

...வலம் வருவோம்

◆ இந்தப் பல்கலைக்கழகத்தின் கீழ் தற்சமயம் 9 உறுப்புக் கல்லூரிகள் உள்ளன.

◆ இவற்றில் சுமார் 700 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

◆ 12 ஆராய்ச்சி நிலையங்கள், 15 ஆராய்ச்சி ஆய்வகங்களைக் கொண்டுள்ளது இந்தப் பல்கலைக்கழகம்.

◆ 22 பாடப்பிரிவுகளில் முதுநிலைப் பட்டயப் படிப்புகளைத் தொலைநிலைக் கல்வி முறையில் இந்தப் பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது.

## திராவிட மாடல் சாட்சியங்கள்!




திராவிட மாடல் அரசு, இந்தியாவுக்கே முன்மாதிரி என்பது சமதர்ம, சமூக நீதிக் கொள்கைகளில் மட்டுமல்ல, நிர்வாகத் திறமைக்கும் முன்மாதிரியாகத் திகழ்கிறோம். கல்வி, வேலைவாய்ப்புகளில் பாய்ச்சல் நிகழ்கிறது என்றால், தொழில்துறை வளர்ச்சியிலும் கண்முன் புதிய வரலாற்றை எழுதி வருகிறது திராவிட மாடல் அரசு.

சமீபத்தில், ஒன்றிய அரசின் ஆலோசனை அமைப்பான நிதி ஆயோக் வெளியிட்டுள்ள ஒரு புள்ளிவிவரத்தில், ஏற்றுமதிக்கான தயார்நிலையில், தமிழ்நாடு முதலிடத்தில் உள்ள தகவலை அறிய முடிகிறது. கடலோர மாநிலங்களில் ஏற்றுமதி தயார்நிலைப் பட்டியலில், குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களை முந்திக் கொண்டு தமிழ்நாடு 81 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு வந்துள்ளது.

தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற கொள்கைகளை உருவாக்குவது, ஏற்றுமதி வாய்ப்புகளை அடையாளம் காண்பது, அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது என்கிற வகைகள் அனைத்திலும் தமிழ்நாடு அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளது. 2022- ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தப் பட்டியலில் குஜராத் மாநிலம் முதலிடத்திலிருந்து வந்தது. கழக ஆட்சிக்குப் பின்னர் தொழில்துறை கண்டுள்ள மாற்றங்களுக்கு ஒன்றிய அரசின் இந்த புள்ளிவிவரங்களே சாட்சியாக அமைந்துள்ளன. ‘திராவிட மாடல் அரசு என்றால் என்ன?’ என்பதைத் தெரிந்துகொள்ள இனி இதுபோன்ற தகவல்களை ஒன்றியம் அறியும். உலகம் அறியும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரும் சகோதரர்களும்!



அன்பழகன்

என் தந்தை மா.திருமலை, அண்ணா காலத்தில் இருந்தே தீவிர தி.மு.க.காரர். அதனால்தான் எனக்கு அன்பழகன் என்றும், என் சகோதரர்களுக்கு சாக்ரடீஸ், நெடுஞ்செழியன், மதியழகன் என்றும் பெயர் வைத்தார். இந்த உணர்வுதான் எங்களையும் கழகச் செயல்பாடுகளில் தீவிரமாக ஈடுபடச் செய்தது. திருச்சி - திருவெறும்பூர் ஒன்றியத்துக்குட்பட்ட கீழ்கற்கண்டார் கோட்டை கிராமத்தில், ஆகஸ்ட் 21, 1983 அன்று என் தம்பி மிசா தி.சாக்ரடீஸ்-வேளாங்கண்ணி ஆகியோர் திருமணம் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அப்போது ‘கிரேக்க நாட்டு சாக்ரடீஸ் தனது இறுதி வயதில் உயிர்த் தியாகம் செய்தார். என் தம்பி சாக்ரடீஸ் இளம் வயதிலேயே மிசாவில் கைதாகி தியாகம் செய்துள்ளார்’ என்று என் தம்பியைக் குறிப்பிட்டு பேசினார். திருமணத்தின் போது எடுக்கப்பட்ட இந்த புகைப்படம் பல நினைவுகளை தேக்கி வைத்துள்ளது.

**-தி.அன்பழகன், அண்ணா நகர்**
**நவல்பட்டு, திருச்சி**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவும் - தம்பிகளும்

**1951-ஆம் ஆண்டு, டிசம்பர் மத்தியில் கழகத்தின் முதல் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு நிதி திரட்டும் பெரும் பணிகளில் கழக முன்னோடிகள் ஈடுபட்டனர். செங்கல்பட்டு மாவட்டத்தில், ஒரே நாளில் ஏழெட்டு கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வார் சி.வி.எம்.அண்ணாமலை. கூட்டத்துக்கு இருநூறு ரூபாய் வீதம் நிதி திரட்டுவார் கலைஞர். கூட்டம் நடக்கும் ஊர்களில் கழகத் தோழர்களின் வீடுகளிலேயே சாப்பிடுவார்கள். இரவு 2 அல்லது 3 மணிக்குக் கூட்டங்களை முடித்துவிட்டு, பேரறிஞர் அண்ணாவைச் சந்திக்க வருவார்கள். மாநாட்டுத் திடலில் அவர்களுக்காகக் காத்திருப்பார் அண்ணா.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 184




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.